**இம்புல்பே பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 23 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 07 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 16 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இம்புல்பே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தவணை திருப்பி செலுத்துதல் ரூபா 464,754 தொகை 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்றில் செலவு ஒன்றென கணக்கீடு செய்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மிகை அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) வங்கிக் கணக்கு இலக்கம் 2247306 என்ற சுற்றாடல் கணக்கின் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 720,224 இற்கான காசு மீதி நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 722,624 தொகை எனக் கணக்கீடு செய்திருந்தமையினால் ரூபா 2,400 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதன் மூலம் கிடைத்திருந்த ரூபா 96,800 இற்கான வருமானம் நிதி செயலாற்றுகை கூற்றில் மீண்டுவரும் வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான மதிப்பாய்வு குழு படி மற்றும் அனுமதிப்பத்திரக் குழுப் படி ரூபா 12,400 தொகை நிதி செயலாற்றுகை கூற்றில் மீண்டுவரும் செலவின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) இருப்புப் பதிவேடு மற்றும் நுகர்வுப் பண்ட பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இருப்பு மீதி ரூபா 2,017,202 தொகை நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 1,765,322 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் இறுதித் தொக்கு ரூபா 251,880 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 14,200 பெறுமதியான ‘‘ஜீஐ புரி வெட்டும் இயந்திரம்’’ நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லது சொத்துக்களில் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் செலுத்தப்பட்ட சம்பளம் தொடர்பாக பெற வேண்டிய வருமான உதவி ரூபா 1,747,685 தொகை பொதுப் பேரேட்டில் சம்பளக் கணக்குக்கு சரியான முறையில் சீராக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் வருமானக் கடன்கொடுத்தோரின் கீழ் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 3,542,029 இற்கான பெறுமதியுடைய நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள், கொள்வனவு செய்திருந்த தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் நூலக புத்தகங்கள் ரூபா 1,933,343 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் ரூபா 1,608,686 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) சபையினால் நடத்தப்படும் ''நெனஸல'' நிலையத்திற்கு இலங்கை தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தில் இருந்து நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 400,904 தொகை பெறுமதியான கணனி துணைக் கருவிகள் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் போது ''தியபஹஸ'' வாடிவீட்டை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக நிலுவை வாடகை, தண்டப் பணம் நிலுவை நீர்க் கட்டணம் ஆக பெறவேண்டிய ரூபா 51,660 தொகை நிதி நிலைமைக் கூற்றில் பெறவேண்டிய கணக்கு என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய செலவுகள் ரூபா 1,717,960 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஔ) நூலகப் புத்தகக் கணக்கில் ரூபா 2,247,628 தொகையான மீதி நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 1,536,439 என காட்டப்பட்டிருந்தமையால் நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 711,189 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(க) பேரேட்டில் ஏனைய வருமானங்கள் மற்றும் வருமான உதவி ஆகிய கணக்குகளின் கூட்டுத்தொகையாகிய ரூபா 17,393,795 தொகை நிதி செயலாற்றுகை கூற்றில் ரூபா 17,841,457 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 447,662 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ங) பேரேட்டில் ஏனைய வருமானங்கள் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணக் கணக்குகளில் கூட்டுத்தொகையாகிய ரூபா 788,749 நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 683,299 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 105,450 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ச) மீளாய்வாண்டிற்காக காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாடு தொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் காசு வெளிச்செல்லல் என வெளிப்படுத்தப்பட வேண்டிய ஆண்டின் போது உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் வட்டி திருப்பிச் செலுத்துதல் ரூபா 164,743 தொகை நிதி தொழிற்பாடுகளின் மூலம் உருவாக்கி காசுப் பாய்ச்சலின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஞ) மீளாய்வாண்டிற்காக காசுப் பாய்ச்சல் கூற்றில் காலப்பகுதி இறுதியில் ரூபா 1,275,801 தொகையான காசும் காசுக்கு சமமானவையும் ரூபா 1,278,201 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் ரூபா 2,400 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கு மீதிகள்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது வைப்பு பதிவேட்டில் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,940,376 தொகை, கட்டுப்பாட்டுக் கணக்கில் பலவின வைப்புக்களின் கீழ் ரூபா 2,675,809 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் தனிப்பட்ட மீதி பதிவேடுகளிடையே ரூபா 264,567 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) முற்பணக் கணக்கின் கூட்டுத்தொகையாகிய ரூபா 7,447,173 தொகையினை, முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 5,493,505 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் முற்பண பதிவேடு இடையே ரூபா 1,953,668 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(இ) ஊழியர் பிணைப் பதிவேட்டில் பிணை வைப்புக்கள் ரூபா 242,698 தொகை, ஊழியர் பிணை வைப்புக்கள் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 245,059 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் பிணைப் பதிவேடு இடையே ரூபா 2,361 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலக்கம் 0002247304 கொண்ட நடைமுறைக் கணக்கு தொடர்பாக 2015 ஆண்டு ஏப்ரல், ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்கள் தொடர்பான தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் காசேட்டு மீதி மற்றும் பிரதான காசேட்டு மீதியுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 95,609 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆண்டின் போது உள்ளுராட்சி ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபை மந்திரிமாருக்கு வழங்கியிருந்த ரூபா 1,560,000 தொகைக்கான மோட்டார் சைக்கிள் கடன்தொகையில் பிரதேச சபை மந்திரிமார் 07 பேரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 44,216 இற்கான கடன் மீதியொன்று கணக்காய்வுத் திகதியாகிய 2016 மார்ச் 31 திகதி வரையும் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஊருக்கு ஊர் வீட்டுக்கு வீடு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட 12 அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக ரூபா 4,200,813 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தியிருந்த போதிலும் 2016 மார்ச் 31 திகதி வரை உள்ளுராட்சித் திணைக்களத்தில் இருந்து மீளளிப்புச் செய்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 91,029,726 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுக்கு மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 571 | 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 2,675,809 தொகைக்கான வைப்புக்களை ஆதனவளிப்பு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை |
| (ஆ) சப்ரகமுவ மாகாண சபை நிதி விதிக் கோவை | |
| (i) விதி 261.2.7 | 2002 ஆண்டு முதல் வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 7,447,173 இற்கான துணைக் கட்டுநிதிகள் கணக்காய்வுத் திகதியாகிய 2016 மார்ச் 30 திகதி வரை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 214 | 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,017,202 பெறுமதியான களஞ்சியப் பொருட்கள் தொடர்பாக கணிப்பீட்டு சபை ஒன்று நியமிக்கப்பட்டு சான்றுறுதி செய்திருக்கவில்லை. |
| (ஈ) 2006 தேசிய பெறுகைகள் வழிகாட்டல் கோவை | |
| (i) வழிகாட்டல் 4.2.1(அ) | பிரதேச சபையினால் குறைந்த பட்சம் 03 வருட காலத்திற்காக தேவையான பெறுகைகள் அடங்கும் விதமான பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (உ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமாக காணப்படும் ரூபா 659,022 இற்கான கணனிகள் மற்றும் துணைக் கருவிகள் என்பவற்றை கணனிகள் சொத்துப் பதிவேட்டில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 9,520,754 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த வருமானம் ரூபா 9,039,252 தொகையாகக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 481,502 இற்கான முன்னேற்றம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 7,080,213 இனால் அதிகரித்தலும் பிரயாண செலவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் முன்னைய ஆண்டை விட ரூபா 538,862 இனால் குறைந்திருத்தலும் நிதி விளைவுகளில் அதிகரிப்பிற்கு முக்கியமாக காரணமாகியிருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வீத வரி

2013 ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி ரூபா 53,568 தொகை மீதியில் இருந்து ரூபா 23,393 அதாவது 44 சதவீதம் மற்றும் மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வீத வரி ரூபா 111,305 தொகையில் இருந்து ரூபா 14,481 அதாவது 13 சதவீதம் அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.3.2 ஏக்கர் வரி

2014 ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுடன் தொடர்பான நிலுவை ஏக்கர் வரி ரூபா 63,232 தொகை மீதியில் இருந்து ரூபா 60,782 தொகை அதாவது 96 சதவீதம் மற்றும் மீளாய்வாண்டின் பாதீட்டு ஏக்கர் வரி ரூபா 20,000 தொகையில் ரூபா 9,409 தொகை அதாவது 46 சதவீதத்தை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.3.3 நீர்க் கட்டணம்

2014 ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக நிலுவையாகக் காணப்பட்ட நீர்க் கட்டணம் ரூபா 2,641,233 தொகையில் ரூபா 1,341,452 தொகை அதாவது 51 சதவீதம் அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.3.4 முத்திரைக் கட்டணம்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஜனவரி முதல் திசெம்பர் மாதம் வரை பெற வேண்டிய ரூபா 8,883,725 இற்கான முத்திரைக் கட்டணம் கணக்காய்வுத் திகதியாகிய 2016 மார்ச் 30 திகதி வரை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2015 ஆண்டிற்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டு மாகாண சபை பிரதான செயலாளரிடம் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.5 நீதிமன்றத் தண்டப் பணம்**

2013 செப்தெம்பர் முதல் 2015 திசெம்பர் வரையான 28 மாதங்கள் தொடர்பாக ரூபா 1,065,617 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2016 மார்ச் 30 திகதி வரை உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

**3.1 மனித வள முகாமைத்துவம்**

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 02 வருமான நிருவாக பதவிகள் காணப்பட்டதுடன் 2014 ஆண்டு முதல் அப் பதவியின் கடமைகள் வெளிக்களத் தொழிலாளர் ஒருவரினால் மேவகைச் செய்யப்படுகின்றமையால் மீளாய்வாண்டிற்கான சபையின் இலக்கு வருமானத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்ததென அவதானிக்கப்பட்டது.

**3.2 ஒப்பந்த நிருவாகம்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) ஹல்பே கொடதலாவ பாதையை மண்போட்டு தகர்த்து அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 394,934 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 139,586 இற்கான 165 கியூப் போடப்பட்டிருந்த போதிலும் பாதை தகர்க்கும் இயந்திரத்தின் மூலம் பாதை தகர்த்தல் நடவடிக்கை செய்யப்படாமையால் மண் கழுவப்பட்டு கற்கள் வெளியே வந்திருந்ததுடன் பிரயாணத்திற்கு வசதியற்று மற்றும் ஆபத்து நிலைமையொன்று காணப்பட்டதென 2015 ஜூன் 22 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரத்மலவின்ன பல கரும கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 980,000 இற்கான ஒப்பந்த பெறுமதி 2014 செப்தெம்பர் 11 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கட்டிடத்தித்தின் அத்திவாரம் மற்றும் 21 கொங்கிரீட் தூண்கள் நிர்மாணித்து கட்டிடத்தின் முதலாவது கட்டம் 2014 திசெம்பர் 11 திகதி வரை பூர்த்தி செய்திருந்த போதிலும் அத் திகதி முதல் அக் கட்டிடத்தில் காடுகள் வளர்ந்திருந்தன. கொங்கிரீட் தூண்களின் மேற்பகுதியிலுள்ள கம்பிகள் துருப்பிடித்து காணப்பட்டன. அதற்காக செலவிடப்பட்ட ரூபா 255,045 பலனற்ற செலவு ஒன்றென 2015 ஜூன் 22 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) கொழும்பு மட்டக்களப்பு பாதையில் 148 ஆவது கி.மீற்றர் தூணுக்கு அண்மையில் ரத்மல்வின்ன என்ற இடத்தில் நடைபாதை பிரயாணிகளுக்கு வசதிக்காக கொங்கிரீட் தகடு போட்டு அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 90,892 தொகை ஒன்று செலவிடப்பட்டு (500mm x 770mm x 125mm) அளவிலான 51 கொங்கிரீட் தூண்கள் 2015 ஆகஸ்ட் மாதம் அளவில் தயாரித்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2016 மார்ச் 31 திகதி வரை கொங்கிரீட் தகடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) சனசமூக அடிப்படை அமைப்புகளுக்கு ஒப்பந்த வேலைகள் சாட்டும் போது நிதி நிலைமை தொடர்பாக ஆவணங்கள், அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் என்பவற்றை பரிசோதனை செய்து இயலுமை மீளாய்வு செய்யாமல் 25 சந்தர்ப்பங்களில் ரூபா 10,734,100 தொகைக்கு நேரடி ஒப்பந்த வேலை 2012 ஜனவரி 05 திகதிய இலக்கம் 01/2012 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரிவு 3.2 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக சனசமூக அடிப்படை அமைப்புகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(உ) சாட்டப்படும் ஒப்பந்த வேலைகள் சனசமூக அடிப்படை அமைப்பு/ சங்கம் அதிகாரப் பிரதேசத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். எனினும் அதற்கு முரணாக 10 சந்தர்ப்பங்களில் ரூபா 4,391,996 தொகை பெறுமதியான ஒப்பந்த வேலைகள் அதிகார பிரசேத்திற்கு வெளியே உள்ள சனசமூக அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற சொத்துக்கள்**

கூட்டுத்தொகை ரூபா 6,625,000 தொகையான சபையின் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் ஒரு வருடம் முதல் மூன்று வருடங்களை விட மிகையான காலப் பகுதி வரை விளைவற்றுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

**3.4 பெலிஹுல்ஓய ''தியபஹஸ'' வாடி வீடு**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இம்புல்பே பிரதேச சபை சொந்தமான பெலிஹுல் ஒய ''தியபஹஸ'' வாடிவீடு வளவில் 2014 ஆண்டின் போது வாடகையாளர் சபையின் எழுத்துமூலம அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக தலைவரின் அறிவுரையின் பிரகாரம் தொழிநுட்ப உத்தியோகத்தரினால் அதற்காக ரூபா 289,682 இற்கான பெறுமதி மதிப்பீடு ஒன்று செய்திருந்தார். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த நிர்மாண வேலை வாடகையாளருடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் 6 ஆம் பிரிவு மற்றும் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணான நிர்மாண வேலை ஒன்றாகும்.

(ii) சபை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ஆகிய ரூபா 55,924 தொகையான பெறுமதி மதிப்பீட்டு தொகையில் இருந்து கழித்து மீதித் தொகையாகிய ரூபா 233,758 தொகையினை சபையினால் வாடகையாளருக்கு செலுத்தப்பட்டிருந்ததெனவும் சபை நிதியத்திற்கு சட்ட ரீதியல்லாத செலவு பொறுப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) பெலிஹுல் ஓய ''தியபஹஸ'' வாடிவீடு 2016 அண்டிற்காக வாடகைக்கு கொடுத்தல் தொடர்பான வாடகை ஒப்பந்தத்தில் ஏதேனும் ஒரு பகுதியினை அனுபவிக்கும் உரிமையை வேறு ஒருவருக்கு விற்றல், சாட்டுதல் செய்தல் அல்லது துணை வாடகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளக் கூடாது எனினும் ரூபா 155,000 தொகைக்கு வாடகைக்கு பெற்றிருந்த வாடகையாளர் அதனை ரூபா 250,000 தொகைக்கு துணை வாடகை கொடுத்திருந்ததுடன் உடன்படிக்கையை முறித்தல் தொடர்பாக வாடகை எடுத்த வாடகையாளருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ''திய பஹஸ'' வாடிவீடு சுற்றுலா கவர்ச்சியை கொண்டுள்ள இடம் ஒன்றாக காணப்பட்டமையால் அந்த இடத்தை நடத்துவது தொடர்பாக சபைக்கு வருமானம் உருவாக்கக் கூடிய மூலவளங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றை சரியான முறையில் இனங்கண்டு அதற்கு ஏற்ப கட்டணங்கள் அறவீடு செய்தல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதே சபை சட்டத்தின் பிரிவுகள் 122 மற்றும் 126 ஏற்பாடுகளின் பிரகாரம் துணை விதியொன்றினை ஆக்குவதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

**3.5 வாகனக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாகன சம்பவக் குறிப்பேடு மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் பேணப்பட வேண்டும். எனினும் இலக்கம் WP PL – 7541 கொண்ட கப் வண்டி, WP ZA – 5076 கொண்ட JCB பெக்கோ லோடர் இயந்திரம் தொடர்பாக குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையினால் பயன்படுத்தப்படும் 10 வாகனங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மாதாந்த பொழிப்புக்கள் ஏற்பாடுகளின் பிரகாரம் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபைக்கு காணப்படும் மோட்டார் வாகனங்களின் கொள்வனவு செய்த திகதி, கிரயம், வகை, அவற்றின் மாதிரி ஆகிய விபரங்கள் அடங்கும் விதமாக வாகனப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பாவணைக்கு உதவாத நிலைமையிலுள்ள இலக்கம் 151 – 4393 கொண்ட ஹீரோ ஹொன்டா இன மோட்டார் சைக்கிள் மற்றும் இலக்கம் 53 – 5630 கொண்ட மிட்சுபிசி இன கப் வண்டி தொடர்பாக 2015 ஜுலை 15 திகதிய இலக்கம் 02/15 கொண்ட பொது நிதி சுற்றறிக்கை மற்றும் 2013 ஜுன் 05 திகதி இலக்கம் PCMO/PR/2013 கொண்ட ஜனாதிபதி செயலாளரின் கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) ஒவ்வொரு 06 மாதத்திற்கும் ஒரு முறை வாகனங்களின் எரிபொருள் பாவணை பற்றி பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையினால் பயன்படுத்தப்படும் 10 வாகனங்கள் தொடர்பாக 1990 அக்டோபர் 10 திகதிய இலக்கம் 41/90 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரிவு 02 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) சபைக்குச் சொந்தமான 15 வாகனங்கள் தொடர்பாக அவற்றின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.6 செயற்திட்டங்கள் தாமதித்தல்**

பிரதேச சபையினை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் - 2015 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 3,749,000 பெறுமதியான 12 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போதும் அவற்றின் வேலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**04. நல்லாளுகையும் கணக்காய்வுப் பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான சபையின் மதிப்பீட்டு செலவு மற்றும் உள்ளவாறான செலவுகளுடனான இணக்கஞ் செய்யும் போது மீண்டுவரும் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 22 சதவீதம் முதல் 59 சதவீதம் வரை முரண்களும் மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 36 சதவீதம் முதல் 87 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையாலும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவம் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஈ) நிதிக் கட்டுப்பாடு
(உ) மனித வள முகாமைத்துவம்
(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(எ) வாகனப் பாவணை